IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.159/2021

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | ஆதிகேசவன் |
| FATHER NAME | - | துரைராஜ் |
| VILLAGE | - | ஒடுகத்தூர், |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | கிராம உதவியாளர் |
| AGE | - | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.07.2025.

1 முதல் 6 எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி லோகுவிற்கு கு.வி.மு.ச.317 மனு ஏற்பு.

முதல் விசாரணை –

நான் ஒடுகத்தூர் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன்.தற்போது ஒடுகத்தூர் வன்னாந்தாங்கலில் கிராம உதவியாளராக பணிபுரிகிறேன். ஒடுகத்தூரில் கிராம நிர்வாக அலுவலராக சரளா பணிபுரிந்தார். நானும் சரளா வி.ஏ,ஓ வும் ஒடுகத்தூர் பஸ் நிலையம் சென்ற போது வி.ஏ.ஓ விற்கு காவல் நிலையத்திலிருந்து போன் வந்தது. நாங்கள் இருவரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். பின்னர் ஒடுகத்தூர் பஸ் நிலையத்தில் ஆறுமுகத்தை போலீசார் கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நானும் வி.ஏ்ஓ சரளாவும் கையொப்பம் செய்தோம். ஆறுமுகத்தினுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அந்த வாக்குமூலத்தில் உள்ள

கையெழுத்து என்னுடையது என்றால் சரி.

<u>குறுக்கு விசாரணை –</u>

எந்த நம்பரில் இருந்து வி.ஏ.ஓ விற்கு போன் வந்தது என்றால் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். போலீஸ் காவல் நிலையத்தில் ஆறுமுகத்தை நாங்கள் பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த ஆறுமுகத்தை நாங்கள் பார்க்கவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தையும் நாங்கள் படித்து பார்க்கவில்லை. போலீசார் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து கேட்டதால் நானும் வி.ஏ.ஓ வும் கையெழுத்து போட்டோம். நாங்கள் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனையாவது பக்கத்தில் எத்தனை கையெழுத்து செய்தோம் என்றால் தெரியவில்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 30.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

30.7.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**